Y.M.C.A வாசிகசாலை

Registered as a News Paper in Sri Lanka;

பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ மீ ஆடி 8 ஆம் உ செவ்வாய்க்கிழமை (24 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 01 ஓசை 156

## பாலம்போட்டாற்றில் இராணுவம் மீது புலிகள் தாக்கு; ஆயுதங்கள் மீட்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் பாலம்போட்டாறு என்னும் இடத்தில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதல் பாலம்போட்டாற்றில் இருந்து கொல்புர இராணுவ முகாம் நோக்கி வந்த இராணுவத்தினர் மீதே மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து ரீ 56-1 ரக துப்பாக்கிகள் 3, ரீ 56-2 ரக துப்பாக்கிகள் 3, மகசீன்-21, ஐ. எம். ரவைகள் 500, ஜே. ஆர். கிரனெட் 8, கோல்ஸர் 6, தலைக்கவசம் 5 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# பரந்தனில் இரண்டாம் நாளாக புலிகள் - படை கடும் மோதல்!

## இருவர் வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை இராணுவ முகாமருகே அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் காவலரணில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பிரசன்னா (தயாபரன் புத்தூர்) சினைப்பர்த் தாக்குதலில் நேற்று மரணமடைந்தார்.

அதேவேளை கோட்டை இராணுவ முகாமிற்கு அருகேயுள்ள விடுதலைப் புலிகளின் காவலரணில் பணியாற்றும் போது சில நாட்களின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளைமர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி முச்சந்தி இராணுவ முகாமில் இருந்த ஒட்டமாவடிப் பாலத்திற்கு கவச வாகனங்கள் சகிதம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முன்னேற முற்பட்ட போது இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் இளைமர் தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் இராணுவத்துக்கு ஏற்பட்ட சேதத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமிற்குப் பின்வாங்கினர். சேதவிபரங்கள் தெரியவில்லை. (ம)

## கோட்டை முகாமில் இருந்து காயமுற்ற படையினரை கொண்டு செல்ல முயற்சி

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவ முகாமிலிருந்து காயமடைந்த இராணுவத்தினரைசர்வதேசசெஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளின் உதவியுடன் தரை மூலமாக வெளியே எடுத்து சிகிச்சை அளிப்பது சம்பந்தமாக ஆலோசனைகள் நடைபெற்று வருகிறது. ஒரு சில நாட்களுக்கு முன்பு கோட்டையிலிருந்து இராணுவத்தினரை எடுப்பதற்கான ஆயத்த நிலையில் எந்நேரமும் இருக்குமாறு அறிவித்தல் வந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 15 இராணுவம் பலி 35 பேர் காயம்; ஐந்து வீரவேங்கைகள் வீரமரணம்

(பரந்தன்)

கிளிநொச்சி இராணுவ முகாமைநோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரண்டாவது நாளாகக் கடும் சண்டை நடைபெறுகின்றது. தரைவழியாக முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு துணையாக விமானப்படை விமானங்களும், ஹெலிகப்டர்களும் பரந்தன் பகுதியில் கடும் தாக்குதல்களை மேற்கொண்டபோதிலும் இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுத்து புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலவரையறையற்ற ஊரடங்கு என சிறிலங்கா அரசுஅறிவித்துள்ளபோதிலும் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆனையிறவு உப்பளம் விடுதி, உல்லாசப்பயணிகள் விடுதி ஆகிய இடங்களில் ஹெலியினால் தரையிறக்கப்பட்டு நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை பத்துமணிக்கு லக்ஸபான வழியாக முரசுமோட்டை இரண்டாம் கட்டைக்கு வரும்போது அவர்களை இடையில் வழிமறித்து விடுதலைப்புலிகள் கடுந்தாக்குதல் மேற்கொண்டனர். தொடர்ந்து பலமணி நேரமாக நடைபெற்ற இச் சண்டையில் ஸ்ரீலங்காவின் விமானப்படை விமானங்கள் கடும்தாக்குதலை மேற்கொண்டன.

இத்தாக்குதலின் போது பதினைந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாயகமீட்பு நிதி

தாயகமீட்புநிதிக்கென வழங்குவதற்கு பவுண் கைவசம் இல்லாத பொதுமக்கள் அதற்குப் பதிலாக 10,000 ரூபாவை வழங்கலாம்.

தாயகமீட்பு நிதிக்கென பவுண் வாங்கவரும் எமது குழுவினர் பவுண் இல்லாதவர்களிடம் பவுணுக்குப் பதிலாக 10,000 ரூபாவைப்பெற்றுக் கொள்வார்கள் என்பதை அறியத்தருகிறோம்.

-தமிழீழ விடுதலைப்புலிகள்

## யாழ் நகர் மீது நேற்று மும்முறை விமானத் தாக்குதல்

(விசேடநிருபர்)

கடந்த ஞாயிறு இரவு 7.30 மணியளவில் யாழ் நகரில் நடத்தப்பட்ட இரவுக் குண்டுத் தாக்குதலில் டாக்டர் பிலிப்ஸ்நேர்சிங்கோமுக்கு அண்மையாக ஆறாம் குறுக்கு வீதியில் குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்ததில் பத்துக்கும் மேற்பட்டவீடுகள்சேதமடைந்தன.

நேற்றுக்காலை 7-15 தொடக்கம் யாழ். கோட்டை இராணுவ முகாமிற்குள் உணவு போடும் முயற்சியில் இரண்டு அவ்ரோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையைச் சேர்ந்த 50 அகதிக் குடும்பங்கள்

### யாழ். மாவட்டத்தில் குடியிருக்க விருப்பம்

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்திலிருந்து அகதிகளாக யாழ்.மாவட்டத்துக்கு வந்தவர்களுள் 50 குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பப் போவதில்லையென மறுப்புத் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்திலேயே தொடர்ந்து குடியிருக்கப் போவதாக விருப்பம் தெரிவித்த 50 குடும்பங்களும் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை பொது நிறுவனத்திடம் கையளித்துள்ளனர்.

இந்த அகதிக்குடும்பங்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொது நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 'எங்கள் போராட்டம் அடக்கப்படும் இனங்களின் எழுச்சிக்கு வித்திடும்'

-யோகி

(கல்வியங்காடு)

இன்று எமது விடுதலைப் ...

...கும்நிலையில் இருக்கின்றோம் இதுவே ஏனைய ஒவ்வொரு

## 440 இராணுவம் இறப்பு; 456 பேர் கால்களை இழப்பு

(கொழும்பு)

...டன் கடந்த 1 1/2 மாதங்க

## வடமராட்சி கடற்கரைப் பிரதேசத்தில்

## 456 பேர் கால்களை இழப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நடைபெற்ற போர்களில் 440 இராணுவத்தினர் இறந்துள்ளனர் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் றஞ்சன்விஜேயரத்தினா அறிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடந்த 1 1/2 மாதங்களாக நடைபெற்றுவரும் போரிலேயே இவர்கள் இறந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

403 இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர் பொலிசாரில் 53 பேர் தமது கால்களை இழந்துள்ளனர்.

## "நிரந்தரத் தீர்வையே மக்கள் நாடுகின்றனர்"

(வவுனியா)

அரச படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அழிவுகளையும், இழப்புக்களையும் ஏற்று, சகல உரிமைகளும் கொண்ட நிரந்தரத்தீர்வையே தமிழ்மக்கள் தேடிநிற்கின்றனர்.

மேற்கண்டவாறு வவுனியா உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வட்ட அவைத் தலைவர் திரு. க. சிவசுப்பிரமணியம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா இராணுவ இணைப்பதிகாரியினால், அரச ஊழியர்கள் மீண்டும் அலுவலகங்களுக்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திற்கு 23 படகுகளில் 700 இலங்கைத் தமிழ் அகதிகள்

(இராமேஸ்வரம்)

இருபத்திமூன்று படகுகள் மூலம் எழுநூறு இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள்.

இதேவேளை 640 குடும்பங்களைச்சேர்ந்த 2300 தமிழ் அகதிகள் செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள பத்துப் புயற்காற்று தடுப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இக்குடும்பங்களின் 300 குழந்தைகள் அருகிலுள்ள பாடசாலைகளில் கல்விபயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(கல்வியங்காடு)

இன்று எமது விடுதலைப் போராட்டத்தை எந்த ஒரு நாடும் ஆதரிக்கத் தயாராக இல்லை. இருந்த போதிலும் நாம் தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். எம்மினத்திற்கென்று ஒரு அரசை அமைக்கும்நிலையில் இருக்கின்றோம் இதுவே ஏனைய ஒவ்வொரு நாட்டிலும் போராடிக்கொண்டிருக்கும் தேசிய இனங்களின் எழுச்சிக்கு வித்திட்டு விடும் என்பதால் எந்த ஒரு நாடும் எம்மை ஆதரித்து உ.தவி ஒத்தாசைகள் தர தயாராகவில்லை. எம்மை நாமே கொண்டு நடத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

கல்வியங்காடு சந்தையில் நடந்தசெல்லக்கிளி(அம்மான்) விடுதலைப் புலிகளின் ஆரம்ப தாக்குதற் பிரிவு தலைவர் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவுக் கூட்டத்தில் பேருரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி தமது உரையின் ஒரு கட்டத்தில் குறிப்பிட்டார்.

இந் நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம் அவர்கள் அம்மான் செல்லக்கிளியின் பட

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நிர்வாகமாவட்டத்தில் நேற்றுக் காலையிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

## அதிகாரி பலி

(பரந்தன்)

கிளிநொச்சி முகாமினுள் இருந்த இராணுவ உயர் அதிகாரி மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட சினைப்பர் தாக்குதலினால் அதிகாரி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

### வடமராட்சி கடற்கரைப் பிரதேசத்தில்

## ஸ்ரீலங்கா கடற் படையினர் தொடர்ந்து பீரங்கிதாக்குதல்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதிக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை பயங்கரமான பீரங்கித் தாக்குதல்கள் இடம் பெற்றன. மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட இப்பீரங்கிக் குண்டுகள் பல இடங்களில் விழுந்து வெடித்தன. இதனால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. மூவர் காயமடைந்ததாகத் தெரிய வந்தது. சனிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை கற்கோவளக் கடற்கரைப் பகுதிகளையும், இப்பகுதிகளை அண்டியுள்ள கிராமங்களையும் ஹெலிகப்டர் ஒன்று பலதடவை வட்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையில் தமிழ் மக்களுக்கு

## பாதுகாப்பு உறுதியாகும்வரை அகதிகளை அனுப்ப முடியாது

### -இராமேஸ்வரத்தில் ஆளுநர் பர்னாலா

(சென்னை)

"இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உறுதியாகும்வரை இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப முடியாது" என்று தமிழக ஆளுநர் திரு. பர்னாலா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துவெளியிடுகையில் தற்போது இலங்கையிலுள்ள தமிழர்களின் நம்பிக்கையை இலங்கை அரசு பெறட்டும். பின்னர் அகதிகளைத் திருப்பி அனுப்புவதைக் கவனிக்கலாம் என்றார்.

இராமேஸ்வரம் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை நேற்று முன்தினம் பார்வையிட்டு அவர்களின் உண்மை நிலைமைகளை அறிந்ததன் பின்பு செய்தியாளர்கள் மத்தியில் பேசும் பொழுதே திரு. பர்னாலா இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லையென்பதால் தாம் மீண்டும் இலங்கைக்கு செல்ல விரும்பவில்லை என்று தமிழ் அகதிகள் கூறியதாகவும்; மன்னார், பேசாலை துறைமுகங்களில் இந்தியாவுக்கு வரமுடியாது தவித்துக்கொண்டிருக்கும் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட அகதி மக்களுக்கு இந்தியா கப்பல் அனுப்ப வேண்டுமென்று அம் மக்கள் தம்மிடம் கோரியதாகவும் அவர் கூறினார்,

(4ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

## வடபகுதிக்கானதடைகளைநீக்க பிரேமதாசாவிடம் கோரிக்கை

வடபகுதிக்கான தடைகளை உடனடியாக நீக்கி விவசாயம், கைத்தொழில், மீன்பிடி ஆகியவற்றை மீண்டும் ஆரம்பிக்க ஆவன செய்யுமாறும் உணவுப் பொருள்களை போதிய அளவு அனுப்பி வைக்குமாறும் யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள் ஜனாதிபதி பிரேமதாஸா விடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள 23 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களும் நேற்று நடத்திய கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

எரிபொருள் தடையினால் இந்த மாவட்டத்தில் விவசாயச் செய்கை கைவிடப்பட்டுள்ளது; கைத்தொழில்கள் இயங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வைத்தியசாலை இராணுவ ஆஸ்பத்திரியாகும்

(வவுனியா)

வவுனியா அரச வைத்தியசாலை இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு வருவதாக நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைத்தியசாலை சில வாரங்களாக மூடப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதை மீண்டும் செயல்பட வைத்து, சிங்கள வைத்தியர்களையும், ஊழியர்களையும் புதிதாக நியமித்து, இராணுவத்தினருக்கு மட்டும் சிகிச்சை செய்யும் வைத்தியசாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்த வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியர்கள் அனைவரும் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றிருப்பது தெரிந்ததே.

இந்த வைத்தியசாலையில் இதுவரைகாலமும்செயல்படாமலிருந்த சத்திர சிகிச்சை நிலையத்தை மீண்டும் செயல்படவைக்கும் நோக்குடன் இதற்கான உபகரணங்களைக் கொண்டுவர இராணுவ மேலிடம் முடிவு செய்திருப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைப் பி[illegible]ச்சினையில்

## இந்திய[illegible]னது செல்வாக்கை பயன்படு[illegible] வேண்டும் - அனுரா

(டில்லி)

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கூடாக மாத்திரமே சாதகமான ஒரு தீர்வினைக் காண முடியுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் பாராளுமன்றக்குழுவில்அங்கம்வகித்து இந்தியா சென்ற இவர் அங்கு நிருபர்கள் மத்தியில் பேசும் பொழுதே இதனைத்தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் சர்வதேச தலையீடு குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்துள்ள யோசனையை நாம் ஆதரிக்கவில்லை என்று அங்கு கூறிய திரு. அநுரா இன்று எழுந்துள்ள பிரச்சினை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிக்கன இரட்டைச் சூட்டடுப்பு

இன்றைய கால கட்டத்தில் விறகின் உபயோகம் மட்டுப் படுத்த பட வேண்டியுள்ளது. வன வளமும் பாதுகாக்க பட வேண்டும். அதேவேளை அன்றாட உணவு சமையல் வேலைக் காக நாளாந்தம் மக்களுக்கு பெருந்தொகையான விறகு தேவைப்படுகிறது. இயன்ற அளவு விறகின் தேவையை சிக்கனமாக உபயோகப்படுத்துவதற்கு என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள சிக்கன இரட்டைச் சூட்ட டுப்பு பயனுள்ளதாக மக்கள் மத்தியில் பிர பலமடைந்து வருகிறது. இந்த அடுப்பின் மூலம் ஒரே முறையில் இரு வேறு சமையல்களைச் செய்ய முடியும். இதனால் விறகின் தேவையில் முப்பது வீதம் குறைகிறது. ஒரே வெப்பத்தில் இரு வேலை முடிகிறது. இந்த அடுப்பை எமது ஆய்வு நிறு வனம் உற்பத்தி செய்து விநியோகிக்கிறது. மண் சட்டி பானை உற்பத்தியில் ஈடுபட்டு தற்போது வேலையற்றி ருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் நிறுவனம் முன்வந்துள்ளது. அடுப்பு உற்பத்தியில் வேலை வாய்ப்பு பெற விரும்புபவர்கள் தமிழீழ ஆய்வு நிறுவன அலுவலகத் துடன் தொடர்பு கொள்ளலாம்.

## கிளிநொச்சியில் குண்டு வீச்சு கரடிப்போக்கில் சேதம்

(கிளிநொச்சி)

நேற்று முன் தினம் காலை கிளிநொச்சியைச் சுற்றி வட்ட மிட்ட மூன்று விமானங்கள் சரமாரியாகக் குண்டு மாரி பொழிய ஹெலிக் கொப்டர் ஒன்று தாழப்பறந்து பல பொதிகளை கிளிநொச்சி இராணுவ முகாமிற்குள் போட்டது.

விமானங்களை நோக்கி விடு தலைப்புலிகள் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து விமானங்களைத் துரத்தினர்.

விமானங்களில் இருந்து வீசிய குண்டுகள் கரடிப்போக் குச் சந்தி, கணேசபுரம், ஐந் தாம் வாய்க்கால், டிப்போ வடி ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன.

கரடிப்போக்குச் சந்தியில் விழுந்து வெடித்த குண்டி னால் பெற்றோல் நிலையம், பழைய நூல் நிலையம், வியா பார ஸ்தாபனங்கள் பலத்த சேதமடைந்தன.

ஏனைய குண்டுகள் வயல் வெளியிலும், கட்டிடங்கள் இல்லாத இடங்களிலும் விழுந்து வெடித்ததால் சேதங் கள் ஏதும் ஏற்படவில்லை.

(49)

### 16ஆம் திகதி சென்ற

## கொழும்பு பஸ் பயணிகள் வழியில் இறக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

இரண்டு தனியார் பஸ்களில் கொழும்பிற்குப் புறப்பட்ட பயணிகளுக்கு சில கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 16ஆம் திகதி கொழும்பிற்கு இரண்டு பிள் ளையார் தனியார் பஸ் வண் டிகள் முத்திரைச் சந்தியில் இருந்து புறப்பட்டன. பயணி களிடம் கொழும்பிற்கான கட்டணமாக 400 ரூபாவும் அறவிடப்பட்டது.

போகும் வழியில் ஒரு பஸ் கோளாறு ஏற்பட்டுள்ளதாகக் கூறி நிறுத்தப்பட்டது.

கோளாரான பஸ்சில்இருந்த பயணிகளும் மற்றைய பஸ் ஸில் ஏற்றப்பட்டனர் மொத் தம் 108 பயணிகளுடன் ஒரு பஸ் மட்டும் கொழும்புப் பய

தவிர ஏனையோர் அவ்விடத் திலேயே இறக்கிவிடப்பட்ட னர். பயணிகள் தங்களை மடு அல்லது மாங்குளம் நகரத் திலாவது கொண்டுபோய் விடுமாறு கேட்டனர். ஆனால் பயணிகளின் வேண்டுகோ ளைச் செவிமடுக்காமல் பஸ் சென்று விட்டது. பயணிகளி டம் அறவிடப்பட்ட 400ரூபா யும் திருப்பிக் கொடுக்கப்பட வில்லை.

தொடர்ந்துஎப்படிபோவது எங்குபோவதுஎன்றுதெரியாத நிலையில் பயணிகள் தமது மூட்டை முடிச்சுகளையும் தூக்கிக்கொண்டு நான்கு மைல் தூரம் காட்டுப்பாதை யினால் நடந்து சென்று வழி யில் ஒரு றைக்டரைப் பிடித்து

# உணவுக் கஷ்டத்தை நீக்குவதற்கு

# சில ஆக்கபூர்வமான ஆலோசனைகள்

1) சைவ உணவு உண்போர் தினசரி தமது உணவில் பொன்னாங்காணி, வல் லாரை, கீரை, அகத்தி, தவசி முருங்கை இலை, கறிவேப் பிலை என்பனவற்றை நன்றா கச் சேர்த்து உண்பதற்கு பழகவேண்டும். மற்றும் மேற் கூறிய இலைவகைகளை உடைய மரஞ்செடிகளையும் ஒவ்வொருவரும் தமது வீட் டுத்தோட்டத்தில் உண்டாக்கி நற்பயனைப் பெற்று உணவுக் கஷ்டத்தை நீக்கலாம்.

2) எமது அன்றாட பாவ னைக்கு சீனி பாவிப்பதனை தவிர்த்து பனை வெல்லம் பாவிக்கவேண்டும். தினசரி ஒரு லட்சம் பனைகளில் கள் பறிக் கும் தொழிலாளி ஒவ்வொரு வரும் ஒரு மரத்தை கள் சீவாது பதநீர் வடித்து அத னைக் காய்ச்சி பனை வெல் லத்தை தமது வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம். இதன் மூலம் மக்களின் சீனித் தேவையை ஓர் அளவு ஈடு செய்வதுடன் மக்களுக்கு ஓர் புதிய குடிசைக் கைத்தொழில் ஆகவும் பயன் ஏற்படும்.

3) சிங்களமக்கள் தமது உண வில் பலாக்காய், பப்பாசிக் காய், பூசினிக்காய் என்பன சேர்த்து பல வகையான உணவுகளை தயார் செய் வார்கள். எனவே தமிழ் மக் களாகிய நாமும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய எமது உணவில் பலாக் காய், பூசனிக்காய், பப்பா பாசிக்காய், ஈரப்பலாக்காய் என்பனவற்றில் கறி சமைத்து எமது அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

4) எமது மக்கள்மரவள்ளியை உற்பத்தி செய்வது மிகக் குறைவு. தற்போது கடும் வரட்சி ஆகையினால் மர வள்ளி பயிரிடலாம். இது பிர யோசனப்படக்கூடிய ஓர் பயிர் ஆகும். இதன் கிழங்கை அவித்து' பொரித்து, கறி சமைத்து சாப்பிடலாம்.

மரவள்ளி நுனிக்குருத்து இலைகளை துவைத்து (இடித்து) வறுத்து சாப் பாட்டு உணவாகவும் சாப் பிடலாம். இப்படியான சில பழக்கம் எம்மக்கள் சிலரிடம் தான் காணப்படுகிறது. இப் பழக்கத்தை எம்மக்கள் அனை வரும் செயல்படுத்த வேண் டும்.

வீட்டில் எல்லோரும் வாழை மரம் நாட்டி வாழை மரத் திலிருந்து பழம், காய், பொத்தி, தண்டு, இலை' வடகம் போன்ற பல உண வுப் பொருட்களைப் பெற்று எமது அன்றாடத் தேவை களை பூர்த்தி செய்யலாம்.

## குடும்பத்தைக் கொன்று தானும் தற்கொலை செய்த இலங்கை நிபுணர்

(பிலடெல்லியா)

இலங்கையைச் சேர்ந்த புற்றுநோய் நிபுணரும் அவரது மனைவி இரண்டு குழந்தைகள் ஆகியோர் அவர்களது இல்லத்தில் இறந்து கிடந்துள்ளனர் என அமெரிக்க துப்பறிவாளர் பிரிவைச் சேர்ந்த தோமஸ் குவின் தெரிவித்துள்ளார்.

49 வயதுடைய புற்றுநோய் நிபுணருமான டாக்டர் அந்தோனி போல் தாம் தற்கொலை செய்யப் பேவதாக கடிதம் எழுதி தனது காரியாலயத்தில் வைத்ததாகவும் அதனைக் கொண்டே தாம் அவரது இல்லத்திற்கு சென்று இறந்த சடலங்களைக் கண்டு பிடித்ததாகவும் அவர் கூறினார்.

தமது தற்கொலைக்கு பணப் பிரச்சினையும், மனைவியினதும், மகனினதும் மருத்துவப் பிரச்சினைகளும்தான் காணம் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இறந்தவர்களின் கை நரம்புகளில் ஊசி ஏற்றப்பட்ட நிலையிலே அவர்கள் இறந்து காணப்பட்டனர். அதிலிருந்து தனித்தனியான குழாய்கள் இறந்தவர்களின் கையில் பொருத்தப்பட்டு இருந்தன. இவர்கள் அந்தரப்பட்டு இறந்ததற்கான அறிகுறிகள் காணப்படவில்லை எனவும் துப்பறிவாளர் குவின் தெரிவித்தார்.

## இன்னும் விடுவிக்கப்படவில்லை

(அஸாம்)

அஸாம் ஐக்கிய முன்னணி யினரால் கடத்திச் செல்லப் பட்டுள்ள எண்ணெய் கோர்ப் பரேஷன் தலைவர் திரு எஸ். கே. தாஸ், அவரது மகன், கார்சாரதி ஆகிய மூவரும் எட்டு நாட்கள் முடிவடைந் தும் இன்னும் விடுவிக்கப்பட வில்லை.

# எமது மண்ணை பறிக்க, மக்களை அழிக்க, சிங்கள தேசம் முற்படுகிறது

\- யோகி

(கரவெட்டி)

''எமது மண்ணைப் பறிப் பதற்காகவும், எமது மக்களை அழிப்பதற்காகவும் சிங்கள தேசமே சிறிலங்கா அரசுடன் கை கோர்த்துச் செயற்படும் இவ் வேளையில் இச்சவாலை சந்திக்க நாம் அனைவரும் தயாராக வேண்டும்.''

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செய லாளர் நாயகம் திரு. யோக ரத்தினம் யோகி வல்வைக் கடலில் வீரமரணமடைந்த கடற் கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத் கப்டன் கொலின்ஸ் ஆகியோ ரின் எட்டாம் நாள் நினை வஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார்.

வல்வை நெடிய காட்டு மைதானத்தில் நிகழ்ந்த இவ்

இடைப்பட்ட இளைஞர் யுவ திகள் தான் சாதாரண ஒவ் வொரு குடும்பத்திலுமுள்ள சராசரி இயல்புகள் ஆசா பாசங்கள் இவர்களுக்குமுண்டு ஆயினும் இவற்றை உதறித் தள்ளிவிட்டு மக்களாகிய உங் களுக்காக மரணத்தை தழு வும் மகத்தான தியாகத்தை எண்ணிப் பாருங்கள். இவர்க ளின் தியாகங்களுக்கு மதிப் பளித்து இவர்களின் இலட்சி யத்தை வென்றடைய அனை வரும் எம்மோடு இணைய வேண்டும். இந்தப் போர் இறு திப் போர் என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் பேசுகையில்;

''சிங்களப் பேரினவாத

இலட்சியத்தை வென்றடைய அனைவரும் கிளர்தெழ வேண் டும்'' என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் துணைச் செய லாளர் செல்வி சுந்தரி பேசு கையில்; ''கிழக்கு மாகாணத் தில் எமது மக்களின் பாரம் பரிய பிரதேசங்களில் குடி யேற்றப்பட்ட முதியவர்கள் கூட அந்த மண்ணை காப் பாற்றுவதற்காக ஆயுதம் தாங்கி நிற்கின்றார்கள் என் றால் எமது சொந்த மண்ணை காப்பாற்ற நாம் ஏன் முன் வரக்கூடாது. கிழக்கு மாகா

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

உயர்திரு. பொ. நா. கனகசபை

(ஓய்வுபெற்ற நில அளவை உப அதிகாரி)

மலர்வு: 14-06-1926 உதிர்வு: 27-07-1987

ஸில் ஏற்றப்பட்டனர். மொத்தம் 108 பயணிகளுடன் ஒரு பஸ் மட்டும் கொழும்புப் பயணத்தைத் தொடர்ந்தது.

யாக்கல என்னும் இடத்தில் குறிப்பிட்ட 28 பயணிகள் யினால் நடந்து சென்று வழியில் ஒரு றைக்டரைப் பிடித்து அதன் மூலம் பெரிய மாங்குளத்தை 17ஆம் திகதி சென்றடைந்தனர். (ம)

## அறிவித்தல்

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் கல்வி தொடர்பான அடக்குமுறைகளைக் கண்டித்து மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்த இருப்பதனால், இதில் சகல உயர்தர மாணவர்களையும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் சீருடையுடன் தவறாது சமுகமளிக்கும்படி மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது.

**இடம் : யாழ் / இந்து மகளிர் கல்லூரி**

**காலம் : (25-07-90) புதன்கிழமை காலை 9 மணி.**

(R/544)

கொண்டு உரைநிகழ்த்தினார்.

வல்வை நெடிய காட்டு மைதானத்தில் நிகழ்ந்த இவ் அஞ்சலிக் கூட்டத்திற்கு பருத்தித்துறை வட்டவைத்தலைவர் திரு. கோ. கருணானந்தராசா தலைமைவகித்தார். திரு. யோகரத்தினம் யோகி தொடர்ந்து பேசுகையில்;

இந்த மண்ணின் விடுதலைக்காகவும், மக்களின் விடிவிற்காகவும் போராடிக் கொண்டிருக்கும் நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்த வடிவத்திலும் மரணத்தைச் சந்திக்க தயாராகவுள்ளோம் என்பதை எமது அளப்பெரும் தியாகங்கள் மூலம் நிரூபித்துள்ளோம்.

இந்தத் தியாகங்களைச் செய்பவர்கள் யார் அவர்கள் எத்தகைய மனவலிமையுடையவர்கள் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள் இவர்கள். 15 - 25 வயதுக்கும்

செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் பேசுகையில்;

''சிங்களப் பேரினவாத அரசு எம்முடன் நேர்நின்று போராட திராணியற்றவர்களாய் தமது இறுதி நடவடிக்கைகளான கடல் ஆகாயம் முதலான வழிவகைகளினூடாக தமது அதிவேக தாக்குதல்களை தொடுத்து வருகின்றது. இந்த வகையில் தான் வல்வையிலும் பாரிய கப்பலொன்று தரித்து நின்று எமது மக்களை துன்பப்படுத்தி வந்தது. அந்த வேளையில் தான் எமது கடல் கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோர் கரும் புலிகளாக உருவெடுத்து காவியம் படைத்து தம்மை அழித்துக்கொண்டனர். இவர்களின்

காப்பாற்ற நாம் ஏன் முன் வரக்கூடாது. கிழக்கு மாகாணத்தவர்கள் எமது யாழ் மாவட்டத்தை பாதுகாக்கின்றார்களானால் நாம் ஏன் கிழக்கு மாகாணத்தை காக்க புறப்படக்கூடாது. எமதருமை மக்களே கிளர்ந்தெழுங்கள் எமது கரங்களைப் பலப்படுத்துங்கள்'' என வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வைபவத்தில் வடமாராட்சி பொறுப்பாளர் திரு. சூசை, கவிஞர் வாஞ்சிநாதன் வடமராட்சி மக்கள் முன்னணி பொறுப்பாளர் திரு. குணம், வடமராட்சி மக்கள் தொடர்பாளர் திரு ஸ்ரனிலஸ் ஆகியோரும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். (18)

**உயர்திரு. பொ. நா. கனகசபை**

(ஓய்வுபெற்ற நில அளவை உப அதிகாரி)

மலர்வு: 14-06-1926 உதிர்வு: 27-07-1987

திதி: 24-07-1990

**ஆருயிர் தெய்வமே! அன்புத் தந்தையே!!**

''ஆண்டு மூன்று சென்றதையா
அருமை முகம் காணாமல்
நீண்ட துயி லுற்றனையோ
நீள் புவியிலெமை மறந்து
மீண்டுமொரு பிறப்பிருந்தால்
அதிலும் அருந் தந்தையுனை
வேண்டுகிறோ மப் பிறவி
யதிற் தொடர்பு மிருந்திடவே''

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை நித்தமும் வேண்டுகின்றோம்.

மாகியம்பதி சந்தி, சண்டிலிப்பாய்.

தங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள்

(B.1279)


மக்களின் விடியலுக்காக
நம் ஈழ மைந்தர்கள்
செய்யும் தியாகங்கள் - அவை
விலைமதிப்பற்றவை!

தமிழீழ மண்ணின் மீட்பிற்காக
தரணியிலே உதித்த -
நம் வீரர்களின் செயற்திறன்கள்
வெற்றிபெற தமிழ் மக்களாகிய
நாம் அனைவரும் பிரார்த்திப்போம்!

தமிழீழ அன்னையின்
சுதந்திரத்திற்காக
போராடுகின்ற - நம்
ஈழ மைந்தர்தம்
இலட்சியங்கள்
பாரினிலே வெற்றிபெற
பூரணமாகப் பிரார்த்திப்போம்!

# பஞ்சாட்சரம் அரிசி ஆலை

**சுதுமலை, மானிப்பாய்.**

(B. 1278)

சிந்தனைக்கு

பொய், ஒற்றைக் காலில் நிற்கிறது
மெய்க்கு கால்கள் இரண்டு
– பெஞ்சமின் ஃபிராங்கிளின்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்; 24-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுதான்

“தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும்வேறு” என்று தமிழிலுள்ள பழமொழிக்கு இன்று சிறிமா அம்மையாரும் அவர் பிள்ளை அநுராபண்டாரநாயக்காவும் இலக்கணமாக விளங்குகின்றனர்.

தாய் (வள்ளுவர் மன்னிப்பாராக - தந்தை) மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல் என்று கருதி அநுராவை அரசியலுக்குள் இழுத்தவர் சிறிமா அம்மையார். தாயார் என்ற முறையில் இது பேராசையாக இருந்தாலும் பரவாயில்லை.

பதவிப் போட்டியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் விரிசல் ஏற்பட்ட சமயத்தில் கேட்பார் சொல் கேட்டு பாலூட்டி வளர்த்த கிளி பறந்து போய்விடுமோ என்று அம்மையார் அஞ்சியதுமுண்டு.

அம்மாவுக்கு அருகே இருக்கும்போது அநுரா பிள்ளையாகவே நடந்து அம்மாவின் சிந்தனையோடு ஒத்துப்போவார். கொஞ்சம் வெளியே சுதந்திரமாகத் திரியும் வாய்ப்புக் கிடைத்ததும் சுயமாகச் சிந்திக்கத் தொடங்கிவிடுகிறார்.

சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகம்மது தலைமையில் “அனைத்துக்கட்சிப் பாராளுமன்றத் தூதுக்குழு” ஒன்று சமீபத்தில் புதுடில்லி சென்று திரும்பியது இத்தூதுக்குழுவில் எதிர்க்கட்சியில் இருந்து அநுரா பண்டாரநாயக்காவும் சென்றிருந்தார்.

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அனுப்பி வைத்த இந்தப் பாராளுமன்றத் தூதுக்குழுவில் சென்றிருந்த அநுரா பண்டாரநாயக்கா புதுடில்லியில் பத்திரிகைக்குப் பேட்டியளித்தார்.

“விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்றால் இனி சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் முன்னிலையில்தான் நடத்த வேண்டும்” என்று சிறிலங்கா ஜனாதிபதி கூறிய கருத்தை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அநுரா பண்டாரநாயக்கா அப்பேட்டியில் கூறியிருக்கிறார்.

இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கும் அநுரா, “வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் ஆதரவை விடுதலைப் புலிகள் பெற்றிருக்கிறார்கள்” என்றும் உண்மையை மறைக்காமல் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இந்தியாவை ஒதுக்கி வைத்து இலங்கையில் அமைதி காணமுடியாதென்பதையும் அநுரா பண்டாரநாயக்கா தெளிவுபடுத்தியிருக்கிறார். இலங்கையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன்

# ஒரு சிற்றூரவை உறுப்பினரின் நேரடி அனுபவம்

தமிழீழ மீட்பு நிதிக்காக மக்களிடம் பவுண் சேர்ப்பது தொடர்பாக, மக்களுடனான கலந்துரையாடல்கள் பகுதி பகுதியாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்களால் தற்போது நடத்தப்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்ததே. குறிப்பிட்ட ஒரு பகுதிக்குரிய கலந்துரையாடல் நடைபெறுவதற்கான இடம், காலம் ஆகியவற்றை அப்பகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று முன்கூட்டியே அறிவிக்கும் பணியை அவ்வப்பகுதியின் சிற்றூரவை உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

‘தமிழீழ மீட்பு நிதி’ என்ற தலைப்புடன் இம் மீட்பு நிதி பற்றிய விளக்கங்கள் அடங்கிய - தமிழீழ விடுதலைப் புலிகளின் துண்டுப் பிரசுரம் ஒன்றும் ஒவ்வொரு வீட்டுக்கும் அவ்வேளையில் கொடுபடும்.

யாழ். மாவட்டத்திலுள்ள நல்லூர் பிரதேச சிற்றூரவை உறுப்பினர்கள் நால்வர் அடங்கிய குழுவொன்று மேற்படி பணியில் ஏறக்குறைய இருநூறு வீட்டினரை சந்திக்க நேர்ந்தது. அவ்வாறான சந்திப்பில் கிடைத்த பலதரப்பட்ட அனுபவங்களில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தொகுத்துத்தருகிறார் அந்த நால்வருள் ஒருவர்.

0 0 0

வாசல் கதவு திறந்திருக்கிறது. மெதுவாய்த் திறந்து ‘நன்றியுள்ள மிருகம்’ நிற்கிறதா என நாலுபுறமும் நோட்டம் விட்டு உள்ளே நடக்கிறோம். வீட்டின் கதவு உள்ளே பூட்டப்பட்டு இருக்கிறது.

“அம்மா...” குரல் கொடுக்கிறோம்.

யன்னலில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியின் முகம் தெரிகிறது. எம்மில் ஒருவர் கையில் துண்டுப்பிரசுரங்களுடன்....

இன்னொருவர் - கொப்பி பேனாவுடன்... மற்றும் இருவர்....

அம்மாவுக்கு விஷயம் புரிந்திருக்க வேண்டும்...

யன்னல் வெறிச்சோடுகிறது.

உள்ளே ஏதோ கசமுசா... பேச்சுக்குரல்கள் மிக மெதுவாய்...

மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் கழிந்தன. கதவு திறக்கிறது.

எம் எதிரில் ‘ஐயா’ நிற்கிறார். அம்மாவைக் காணவில்லை.

மேலும் இரண்டுநிமிடங்கள் கழிந்தன.

‘திருக்கதவு’ தாழ் திறக்க- யன்னலில் தெரிந்த தலைவி எம்முன் ‘வெறும் கழுத்தும் வெறும் கையுமாக’- வாயில் அப்பொழுதுதான் திணித்த வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு நிற்கிறார்.

‘உங்களவர் பெயர் என்னம்மா?’

பெயரைக் கூடச் சொல்ல முடியாமல் அம்மாவுக்கு வாய் குழறுகிறது... ‘மது’ வாடை எம் நாசிகளை மோத-

அதிர்ந்து போகிறோம்..

இன்று யுவதிகள் பலர் வீராங்கனைகளாகத் தமிழீழ மீட்புக்காக உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கிற நேரத்திலே ஒரு தாய் கசிப்பு அருந்தி உயிரை இழந்து கொண்டிருப்பதைக்காண எம் இதயங்கள் கனத்துப் போகின்றன.

‘அந்த’ நிலையிலும் தனது நகைகளைக் கழற்றி வைத்துவிட்டு எம்மைச் சந்திக்க வந்த அந்தப் பெண்மணியும் இந்த வீராங்கனைகள் பிறந்த மண்ணில் தான் பிறந்தவர் என்பதை எண்ணியபோது வெறுப்பும் ஆத்திரமும் மேலோங்குகிறது.

வெளியேறுகிறோம்.

0 0 0

ஒரு நடுத்தர குடும்பம். நாங்கள் சென்றிருந்த சமயம் தாய், தந்தையுடன் நான்கு பெண் பிள்ளைகளும் வீட்டில் இருந்தனர்.

“வாருங்கோ... வாருங்கோ..” அனைவரும் மலர்ந்த முகங்களுடன் வரவேற்று எம்மை உட்கார வைத்துத் தேநீரும் தந்தார்கள். (அருமையான வெல்லக்கட்டியும் தந்தார்கள். வெல்லக்கட்டி எப்படிக் கிடைத்தது எனக் கேட்டபோது-தனியார் கடை ஒன்றில்–பகல் 2.00 மணிக்குக் ‘கியூ’வில் ஒன்றரை மணி நேரம் நின்று, கிலோ ஐம்பத்தைந்து ரூபாய்ப்படி 100 கிராம் வாங்கியதாகச் சொன்னார்கள். அப்படிப் பெற்ற வெல்லமே எமக்குத் தேநீருடன் தரப்பட்டது.

“சிறிலங்கா அரசாங்கம் இப்படியொரு கண்மூடித்தனமாய் எங்களை அழிச்சுக் கொண்டிருக்கேக்கை நாங்களும் இண்டைக்குச் சாகிறமோ நாளைக்குச் சாகிறமோ தெரியாது... எத்தினை பெடியள் போராடிக் கொண்

நாம் விடை பெறும் போது “உங்களுக்கும் இது ஒரு பிராக்குத்தானே? வீட்டிலை சும்மா இருந்து பொழுது போகாமை இருக்கிறதை விட இப்படித் திரிஞ்சால் பொழுதும் போயிடும்” - இப்படி அந்தப் பெண்மணி எம்மைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னார்.

அழுவதா...? சிரிப்பதா...? எமக்குப் புரியவில்லை....!

மேலே கூறப்பட்டவை யாவும் நேரில் பெற்ற அனுபவங்களில் சில.

இனி வருவது கேள்வியுற்ற சம்பவம் ஒன்று.

மானிப்பாய் பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட ஒரு பகுதியில் தமிழீழ மீட்பு நிதிக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

அதே பகுதியில் வேறு அலுவல் காரணமாக இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்கள் வீதியில் போய்க்கொண்டிருந்தபோது, ஏழெட்டு வயது மதிப்பிடக்கூடிய ஒரு சிறுமி வீதியோரத்தில், கழுத்தில் பெரியதொரு சங்கிலி போட்டபடி தனியே நின்றிருந்தாள். திருடர்கள் பற்றிய எச்சரிக்கையுணர்வினால் இவர்களிருவரும் சிறுமியை அணுகி-

“ஏனம்மா தனிய றோட்டிலை நிக்கிறாய்...?” என்று கேட்க – சிறுமி பயந்தபடி மறு பக்கமாய் ஓடத் தொடங்கியிருக்கிறாள்.

இவர்களுக்கு எதுவும் புரியவில்லை. ஏன் ஓடுகிறாள் என அவளையே கேட்டபோது “நீங்கள் சங்கிலியைப் பறிச்சுப்போடுவியளாம்... அம்மா சொன்னவ... அதுதான் அம்மா கூட்டத்துக்குப் போகேக்கை இதை என்னட்டைத் தந்திட்டுப்போனவ...” என்ற பதில் சிறுமியிடமிருந்து கிடைத்திருக்கிறது.

இது எத்தனை வேதனைக்குரியது?

இன்று எமது மண்ணில் இந்தப் போராட்டம் ஏன் நடந்து கொண்டிருக்கிறது?

எங்கள் தாயக பூமியை மீட்டெடுப்பதற்காகத் தான் எத்தனையோ இழப்புகளைச் சந்தித்துக்கொண்டு இப்போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் பலர் ஏன் உணருகிறார்கள் இல்லை? அல்லது உணர முற்படுகிறார்கள் இல்லையா?

தமிழீழ மீட்பு நிதிக்கான தமது பங்களிப்பை மனமுவந்து, உணர்வு பூர்வமாய்ச் செலுத்தும் எத்தனையோ தமிழீழ மக்கள் இன்று இருக்கவே செய்கிறார்கள். ஆயினும் ஒரு சிலர் எமது போராட்டத்தின் தாற்பரியங்களை, அதன் தேவையை உணராது இந்தப் போராட்டத்திலிருந்து தாமாகவே

ணிட்டைக் குடுத்து மாண்டு போயிருக்கிறம்...’

மேலே அவர் தொடருமுன் நாம் இடைமறித்துக் கூட்டம் பற்றிய விபரங்கள் சொல்லி புறப்பட வேண்டியேற்பட்டது.

0 0 0

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் வீடு.

இவருடைய பிள்ளைகள் திருமணமாகி வெளிநாடுகளில். கடைசி மகள் மட்டும் திருமணமாகிக் குழந்தைகளுடன் இங்கு வசிக்கிறாள். இந்த ஆசிரியர் முன்பு ஆசிரியத் தொழிலுடன் பால் வியாபாரமும் செய்தவர். ‘பாலில் நீர் கலந்து’ சிலர் விற்பனை செய்வதுண்டு. இவர் ‘நீரில் பால் கலந்து’ ‘பால்’ வியாபாரம் செய்து மேலதிக பொருள் தேடியவர். இப்போ பிள்ளைகள் வேறு வெளிநாடுகளில். சேமிப்பு எக்கச்சக்கமாய் உண்டு.

‘தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு’ என்ற வாக்கியத்துக்கு விளக்கமாய்த் தந்தையும் மகளும் நிற்பவர்கள். சமையல் சாப்பாடு முதல் பங்கீட்டு அட்டை, மீளக்குடியமர்தல் நிவாரணம் எல்லாமே வேறு வேறு இவர்களுக்கு.

நாங்கள் போயிருந்தபோது தந்தை வீட்டில் இல்லை. மகளிடம் விபரம் சொல்லி, பிரசுரம் கொடுத்து, விபரங்கள் பதிந்து தந்தையின் பெயர் எழுதத் துவங்க-

‘ஏன் அப்பாவின்ரை பேரும் எழுதிறீங்கள் நாங்கள் இஞ்சை ஒண்டாய்த்தானே இருக்கிறம்?’

அவசரமாய் மகள் இடைமறிக்கிறாள்.

‘மீளக்குடியமர்தல் நிவாரணம் ஒரே பதிவிலை எடுத்தனீங்களா அல்லது வேறை வேறையாய்ப் பதிஞ்சனீங்களோ?’

என நாம் கேட்கவும் அந்தப் பாசமிகு மகளுக்கு எதுவுமே சொல்ல முடியவில்லை.

தந்தையின் பெயரும் பதிவு செய்து நாம் அடுத்த வீட்டுக்குப் படையெடுக்கிறோம்.

0 0 0

வீட்டு முற்றம்

‘அம்மா...’ குரல் கொடுக்கிறோம்.

பதிலில்லை.

என்ன ஆனார் எங்கிருக்கிறார் என்ற விபரங்கள் எதுவுமில்லை. பாட்டியின் மருமகள் இந்திய இராணுவ ‘ஷெல்’ அடியில் பலியானவள். பேரப்பிள்ளைகள் மூவர் தற்சமயம் பாட்டியின் பராமரிப்பில்...

இத்தனை விபரங்களும் அறிய முடிகிறது.

பனங்கட்டித் துண்டுகளுடன் பாட்டி தந்த தேநீர் இதமாய் எமது களைப்பைப் போக்க- நாங்கள் வந்த விபரம் சொல்லிப் பிரசுரம் கொடுக்கிறோம்.

‘அந்தப் பிள்ளையள், சின்னஞ்சிறுசுகள் எல்லாம் வாழிற வயசிலை தங்கடை உயிரைக் குடுத்து எங்கடை நாட்டைக் காத்து நிக்குதுகள்... அந்த நாசமறுந்த சிங்களவங்களிட்டை எங்கடை சமுத்துகள், கையள் போகாமப் பாதுகாக்கிறவைக்கு அந்தக் கழுத்திலை போடிற சங்கிலியையும் கையிலை போடிற காப்பையும் குடுக்கிறதாலை எங்களுக்கு என்ன குறைஞ்சிடப்போகுது? எங்கடை நாடு எங்கடை மண்... நாங்கள் ஒவ்வொருத்தரும் எவ்வளவு செய்ய வேணும்! கடைசி இதையாவது செய்யாட்டி நாங்கள் தமிழர் எண்டு ஏன் இருக்கவேணும்? அல்லது எங்களை மனிசர் எண்டு தான் சொல்ல முடியுமே...? நான் கட்டாயம் கூட்டத்துக்கு வருவன் பாருங்கோ...”

ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து எமக்கு விடை தருகிறார் பாட்டி.

தனது மகனைப் பற்றிய செய்தி எதுவும் தெரியாத நிலையிலும் எமது மண் மீட்புக்காகத் தான் ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்ற உறுதியுடன் நிற்கின்ற பாட்டியின் மனநிலை....

கொளுத்தும் வெய்யில் எமக்கு நிலவாய்த் தெரிகிறது.

நடக்கிறோம்

0 0 0

வாசல் கதவைத் திறக்கும் பொழுதே இறைச்சிக் கறி வாசனை மூக்கைப் பிடுங்கி, நாவில் நீர் ஊற வைக்க உள்ளே நுழைகிறோம். சமையலறை யன்னலில் வீட்டுத் தலைவி தெரிகிறார். நெற்றியில் பளிச் எனக் குங்குமம், கழுத்தில் சங்கிலி, கைகளில்

காணமுடியாதென்பதையும் அநுரா பண்டாரநாயக்கா தெளிவுபடுத்தியிருக்கிறார். இலங்கையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறியிருக்கும் அநுரா இப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கைகளால் தீர்க்க முடியாதென்றும் கூறியிருக்கிறார்.

இதேசமயம் கொழும்பில் அநுராபண்டாரநாயக்காவின் அம்மாவான சிறிமா அம்மையார், வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் ஒரேவழி என்று கூறியிருக்கிறார்.

இதுமட்டுமல்ல, 'அமைதிப்படை' என்று இலங்கைக்குள் வந்த அந்நியப்படையான இந்திய இராணுவத்துடன் தமிழீழத்திலிருந்து தப்பியோடித் தமிழ் நாட்டில் தங்கியிருந்த குழுக்கள் சில ஆயுதந்தாங்கி இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் வந்து அவர்களின் பாதுகாப்புடனேயே தங்கியிருந்து அவர்கள் பாதுகாப்பிலேயே வடக்குகிழக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பை நடத்தி, அவர்களின் பாதுகாப்பிலேயே தமிழ் மக்களைக் கொலைசெய்து, கொள்ளையடித்து அவர்களின் பாதுகாப்பிலேயே மீண்டும் தப்பியோடிய கும்பலுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று சிறிமா அம்மையார் ஆலோசனையும் கூறியிருக்கிறார்.

இந்தியப்படை இங்கிருந்து விலகிச் செல்வதற்கு முன்பாகவே ''பிள்ளை பிடிகாரராக'' இக்குழுவினர் வடக்கிலும் கிழக்கிலும் நடந்து கொண்ட முறையும் இந்திய ராணுவம் புறப்படத்தயாரானதும் அவர்களுக்கு முன்பாகவே தமிழ் மக்களைக் கொலை செய்தும் அவர்கள் சொத்துக்களைக் கொள்ளையடித்தும் இந்தக் குழுக்கள் புரிந்த அட்டூழியங்களும் சிறிமா அம்மையார் கேள்விப்படாதவை; ஆனால் இதை அனுபவித்த தமிழ் மக்கள் இன்று நினைத்தாலும் நெஞ்சம் கலங்கும் சம்பவங்கள்.

இந்தக்குழுக்கள் இந்தியப் படைக்கு முன்னரே வடக்கிலும் கிழக்கிலுமிருந்து மூட்டை கட்டிச் சென்று விட்டன. வடக்கு கிழக்கில் இப்பொழுது என்ன நடக்கிறதென்பதே அவைகளுக்குத் தெரியாது. ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'' என்று ஓடித்தப்பிய குழுக்கள் இவை.

இவைகளைச் சேர்ந்த ஒன்றிரெண்டு பேர் சிறிலங்கா அரசின் பாதுகாப்பில் இன்று கொழும்பில் தங்கி இடையிடையே தம்மையும் நினைவு படுத்திக் கொள்ள ஏதோ அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழினத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்ட சிங்கள பௌத்த பேரினவாதம் இந்தக் குழுக்களையும்தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைகின்றது.

இந்த வகையில் சிறிமா அம்மையாரும் இந்தக் குழுக்களுக்கு உயிரூட்டி தமிழினத்தை அழிப்பதற்குப் பயன்படுத்தலாமென்று கருதுகின்றார்போலும்.

உலகின் முதல் பெண் பிரதமர் என்று எடுத்த பெயர் இப்பொழுது மங்கிவருகிறது என்பதற்கு விடுதலைப்புலிகளை ஒதுக்கிவிட்டு ''செத்துப்போன'' குழுக்களுடன் அரசு பேச்சு நடத்தி ''உயிர் கொடுக்க வேண்டும்'' என்ற மட்டரகமானயோசனை சான்று.

---

கிறார். அம்மாவைக் காண வில்லை.

'வாருங்கோ..வாருங்கோ.. நிக்கிறியள்... இருங்கோவன்... -ஐயா,

'இந்தப் பகுதிக்குரிய தமிழீழ மீட்பு நிதிக் கூட்டத்திற்கு உங்களுக்கு அறிவிக்க வந்திருக்கிறம்...' கூறியபடியே துண்டுப்பிரசுரத்தை நீட்டுகிறோம்.

'எப்ப தம்பி கூட்டம்?' என்று கேட்டவர் எங்கள் பதிலுக்கும் காத்திராமல் ஆரம்பிக்கிறார்.

'என்னெண்டாப்பாருங்கோ இவன் எங்கடை ரெண்டாவது பெடியனை வெளியாலை அனுப்பிறத்துக்காக எங்கடை இவவின்ரை நகையளைத்தான் வித்து ஏஜென்சிக்கார

கிறோம்.

பதிலில்லை.

'வீட்டுக்காரரர்'

அறுபத்தைந்து எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பாட்டி வெளியே வருகிறார்,

'ஆர் மோனையள்...'

இந்த வெய்யிலிலை வெளியிலை ஏன் நிக்கிறீயள்? உள்ளுக்கு வந்து இருங்கோவன்' - பாட்டி.

எமக்கும் சற்றுக் காலாற வேண்டிய தேவை. உள்ளே போய் உட்காருகிறோம்.

வீட்டுச் சொந்தக்காரரர் பாட்டியினுடைய மகன். வவுனியாவில் கடை வைத்திருப்பவர். அண்மையில் ஸ்ரீலங்கா இராணுவப் பிரச்சினைகள் தொடங்கிய பிறகு மகன்

றியில் பளிச் எனக் குங்குமம், கழுத்தில் சங்கிலி, கைகளில் வளையல்கள்...

வீட்டுக் கதவு பூட்டியிருக்கிறது.

அந்தப் பெண்மணி எம்மைக் கண்டதனால் வந்து திறப்பார் தானே என்று கதவைத் தட்டாமல், கூப்பிடாமல் கதவருகே நிற்கிறோம்;

ஒரு நிமிடம்...இரண்டு நிமிடம்.,.. ஐந்து நிமிடங்களாகின.

கறிவாசனை மட்டும் வந்து கொண்டிருக்க - யாருமே வெளியே வரக் காணோம்.

'அம்மா... அம்மா...'

கதவிலும் லேசாய்த் தட்டுகிறோம்.

''வாறம் நில்லுங்கோ...''

பெண் குரல்.

றமோ தெரியாது... எத்தினை பெடியள் போராடிச் செத்துக்கொண்டிருக்கிறாங்கள்... நாங்கள் இப்படியாவது ஏதாவது செய்யாட்டில் பிறகேன் உயிரோடை இருப்பான்...?''

இப்படி வீட்டுத் தலைவர் ஆவேசமாய்ச் சொல்லியபடி எம்மிடம் பிரசுரம் பெற்றுத் தனது பெயரும் பதிந்து தருகிறார்.

0 0 0

ஒரு ஆசிரியர் வீடு.

ஆசிரியர் அந்த நேரம் வீட்டிலில்லை. மனைவி மட்டும் இருக்கிறார். பெயர், விலாசம் யாவும் எழுதித் தந்து-

உணராது இந்தப் போராட்டத்திலிருந்து தாமாகவே தம்மை அந்நியப்படுத்திக் கொண்டு விலகி நிற்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சிலரின் மனநிலை மாறவேண்டும் இது எங்கள் மண் மீட்புக்கான போராட்டம் என்பதை ஆத்மார்த்தமாக உணர்ந்து, ஒவ்வொரு தமிழீழப் பிரஜையும் ஏதோ ஒரு வகையில் இப்போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டிய காலகட்டம் இது. அப்பொழுது தான் தமிழீழத்துக்கான எமது போராட்டம் மேலும் உத்வேகம் பெறும்.. எங்கள் அன்னை பூமியின் விடுதலைக்கு விரைவில் வழி செய்யும். ●

---

# அதிபர்டோவைபதவிவிலக அமைச்சரவை கோரிக்கை

(மன்றோரியா)

லைபீரியாவின் அதிபர் திரு. இம்மானுவேல் டோவை பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அந்நாட்டு அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரசபடையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் கடந்த சல வாரங்களாக சண்டைகள் நடைபெற்று வருகின்றது. இந்தச் சண்டைகளில் தீவிரவாதிகளின் கை ஓங்கிஉள்ளதைத்தொடர்ந்தே அமைச்சர்களால் அதிபருக்கு இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதிபர் திரு. டோவ் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு பதவி விலகிக்கொள்வதன் மூலம் உயிரிழப்பு அழிவுகளைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் என்பதுடன்; அதிபரின் தனிப்பட்ட பாதுகாப்பையும் உறுதி செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் இந்தப் பதவி விலகல் வேண்டுகோளுக்கு அதிபர் டோவ் இதுவரை எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுவதுடன்; தலைநகரான மன்றோரியாவின் மையப்பகுதிக்குள் தீவிரவாதிகளின் தாக்குதல் நெருங்கிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அரசுக்கு எதிரான சண்டையில் ஈடுபட்டுள்ள தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் லைபீரியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார். இந்த அதிகாரி தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததற்கான எவ்வித ஆதாரமும் இல்லை என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், லைபீரியாவின் இந்த நடவடிக்கைக்கு பலத்தகண்டனம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

# ஆப்கானிஸ்[illegible]னில் கெரில்லா அடங்கி[illegible] ஆணைக்குழு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் [illegible] ஆணைக்குழு ஒன்று நி[illegible] பட்டுள்ளது.

ஜனநாயக அடிப்படையிலான தேர்தல் ஒன்றை நடாத்தும் வகையிலேயே இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் உள்நாட்டு கெரில்லாக்கள் உட்பட ஐ. நா அங்கத்தவர்[illegible]ும் அங்கம் வகிப்பார்கள் [illegible] கூறப்பட்டது.

[illegible]லாக்களையும் உள்[illegible]கிய இந்த ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலம் ஆப்கானிஸ்தானில் நில்வி வந்த பன்னிரெண்டு ஆண்டு கால நெருக்கடி நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்று அந்நாட்டு அதிபர் திரு. நஜிபுல்லா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### வடஇந்திய மாநிலங்களில் வெள்ளம்

# 174 பேர் பலி; 42 லட்சம் மக்கள் வீடுகள் இழப்பு

(பீகார்)

பீகார், அஸாம், உத்தரப் பிரதேசம் உட்பட பல பகுதிகளில்பாரிய வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

இந்த வெள்ளத்தினால் மொத்தமாக 174 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஏறக்குறைய 42 இலட்சம் மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளார்கள் 32 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

வடக்கு இந்தியாவின் கங்கை பிரமபுத்திரா, காக்ரா உட்பட பல நதிகளில் அபாய நிலமைக்கு மேல் வெள்ளம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், பல ஏக்கர் உற்பத்தி பயிர்கள் நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிவாரணப் பணிகளும் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## இரண்டு படகுகள் எரிந்தன

கொச்சி துறை முகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இரண்டு படகுகள் முற்றாக எரிந்துள்ளன. இதில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டது.

Registeeredas News Paper at the G. P. O₃

# ஈழநாதம்

யாழ். மாவட்ட மக்கள்

# பட்டினிசாவைஎதிர்நோக்கியுள்ளனர்; அரச சார்பற்ற நிறுவனங்கள்கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக அரசுசார்பற்ற பொது நிறுவனங்களின் மாநாடொன்றில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மக்களினதும், வெளி மாவட்டங்களிலிருந்து அகதிகளாகஇங்கு வந்துள்ளவர்களினதும் வாழ்க்கை நிலைமை பற்றிப் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்றுமாலை கூடி ஆராய்ந்தனர்.

யாழ். நகரில் பொம்மர் குண்டுத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தசமயம்இந்த மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்திற்கு மூன்று மாதத்துக்குப் போதுமான உணவு கையிருப்பில் இருப்பதாகத் தார்மீக அரசு தெரிவித்திருந்தபோதிலும், இப்பொழுது ஒரு சோற்றுப் பருக்கைக்குகூடஅரிசிகையிருப்பில் இல்லை என்று அக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரேயொரு அரசு சார்பு பிரதிநிதி கைவிரித்தார்.

அரசாங்கம் அனுப்பிவைத்துள்ள கப்பல் மூலமான உணவுப் பொருள்கள் வியாழக்கிழமை வந்து சேருமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும், அதனைக் கொண்டுதான் இரண்டாவது கட்ட நிவாரண உதவிகளைச் செய்ய முடியும் என்றும் அந்தப் பிரதிநிதி ஊகம் தெரிவித்தார்.

அப்பொழுது, பொது நிறுவனப் பிரதிநிதி ஒருவர் குறுக்கிட்டு கடந்த ஜூன் 11 ஆம் திகதிக்குள் கொடுக்கப்பட வேண்டிய இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள்கள் (ஜூலை 19) அன்றுவரை வழங்கப்படவுமில்லை என்றும், இதற்கான முயற்சிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டதாகவும் தெரியவில்லை என்றும் கண்டனம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில்உள்ள 17 அகதி முகாம்களில் 1700 குடும்பங்கள் இருப்பதாகவும் போதிய நிவாரண வசதி இன்றிக் கஷ்டப்படுவதாகவும் அந்த முகாம்களின் பராமரிப்பாளர்களுள் ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியர்களின் வசதிகள் இருந்த போதிலும், மருந்து வகைகளின் பற்றாக் குறையால் அகதிகள் நோய் வாய்ப்பட்டு அவதிக்குள்ளாகிறார்கள்என்றும்அவர்சொன்னார்.

பொது நிறுவனங்கள் இம் முகாம்கள் மீது மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டுள்ளனவோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறதென்றும் அவர் சொன்னார்.

பொதுவாக யாழ். மாவட்டத்தில் அகதி முகாம்கள் போதியளவு உணவு, சுகாதார வசதிகளற்ற நிலையிலிருப்பதாகவும், அவ்வப்பகுதி கிராம சேவைஅலுவலர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூர் அவை உறுப்பினர்களும், பொது நிறுவனங்களும் கூடிய கவனமெடுத்து முகாம்களைப் பராமரிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 31 பேரைப் பலிகோண்ட படகு விபத்து சதிவேலையா?

(வவுனியா)

கடந்த பத்தாம் திகதி மன்னார் கடலில் இடம்பெற்ற படகு விபத்து திட்டமிடப்பட்ட சதிவேலை என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி படகைச் செலுத்திச் சென்ற ஓட்டிகள் இருவரும் விடுதலைப் புலிகளினால் தேடப்பட்டு வருகிறார்கள்.

இப்படகில் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பயணம் செய்தனர் என்பது தெரிந்ததே. இதில் பயணம் செய்து தப்பிவந்த பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த நல்லசாமி ரவிச்சந்திரன் என்ற இளைஞர் இப்படகு விபத்துச் சம்பந்தமாக ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்ததாவது-

படகு புறப்படும் சமயத்தில் பயணிகள் அதிகளவில் ஏற்றப்பட்டுள்ளனர். இது ஆபத்தாக முடியும் என்று பலர் கூறிய போது 'ஆபத்து எதுவும் வராது, போகலாம்' என்று ஓட்டிகளால் கூறப்பட்டதாம்.

நடுக்கடலை படகு அண்டிய போது, படகின் இயந்திரம் ஓட்டிகளாலேயே திடீரென நிறுத்தப்பட்டதாம். இதையடுத்தே படகு கவிழநேர்ந்ததாம்.

கவிழ்ந்த படகின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு, சுமார் ஒரு மணித்தியாலம் தன்னுடன் சேர்ந்து 14 பேர் நின்றதாகவும் வேறொரு படகு வந்தே தம்மைக் காப்பாற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்படகில் பயணம் செய்த பிரயாணிகளால் சுமார் நாற்பது பவுண் நகையும், இரண்டு இலட்சம் ரூபா பணமும் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இப்படகு விபத்துச் சம்பந்தமாக படகின் உரிமையாளரை விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர். (தி)

## குருநகர் மக்கள் நிரந்தர இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர்ப் பகுதிகளில் தொடர்ந்து நடந்து வரும் விமானக் குண்டுவீச்சு சம்பவங்களினால் அப்பகுதி மக்கள் நிரந்தரமாக அப்பகுதிகளைவிட்டு இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆரம்பத்தில் யாழ் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல்த் தாக்குதல்களினால் அப்பகுதிப் பொதுமக்கள், அருகிலுள்ள சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வேறுபல இடங்களுக்கும் தற்காலிகமாக அகதிகளாக இடம்பெயர்ந்திருந்தனர். ஆனால் சில தினங்களாக தொடர்ந்து அப்பகுதியிலேயே விமானக்குண்டு வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் தமது வீட்டிலுள்ள பெறுமதிமிக்க பொருட்கள் உட்பட சகல அசையும் பொருட்களையும், சிலர் கதவுகள் ஜன்னல்களையும்கூட கழற்றி மாட்டு வண்டிகள் மூலமும், லான்ட் மாஸ்டர்மூலம் எடுத்துச்செல்லுவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ம)

## கல்வி அடக்குமுறையைக் கண்டித்து மாபெரும் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் கல்வி தொடர்பான அடக்குமுறைகளைக் கண்டித்து மாபெரும் ஊர்வலம் ஒன்றை ... ங்கு நடைபெறும்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கான கலந்துரையாடல் நல்லூர் மங்...

## இரண்டு வீடுகள் தரைமட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை 7.30 மணியளவில் நடந்த விமானக் குண்டு வீச்சில் யாழ் பற்றிக்ஸ் கல்லூரிக்குப் பக்கத்தில் ராஜேந்திராலேனில் உள்ள வீட்டில் குண்டு ஒன்று விழுந்து வெடித்ததில் இரண்டு வீடுகள் தரைமட்டமாகியது.

## புகையிரத ஊழியர்களுக்கு 1000 ரூபா சம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரச படைகளின் தாக்குதல்களினால் வெளி மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள சகல புகையிரதப் பகுதி ஊழியர்களுக்கும் யாழ். செயலகத்தில் இருந்து சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வுதவிப் பணம் பெறாத வெளி மாவட்ட ஊழியர்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்களைச் சந்தித்துப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பத்து மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தில் நடந்த புகையிரத நிலைய ஊழியர்களுக்கான கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவ்வூழியர்கள் தமது சம்பளபணத்தை யாழ். செயலகத்தில் இருந்து பெறுவதற்காக யாழ். அரசாங்க அதிபருடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஊழியர்களின் பாதிப்பு விபரங்களும், உயிர்ச் சேதங்களும் கூட இங்கு பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதனால் இந்த உதவிகள் இதுவரை பெறாத வெளி மாவட்ட புகையிரத நிலைய ஊழியர்கள் தொடர்ந்து நடைபெற இருக்கும் இக் கூட்டங்களில் கலந்து கொண்டு உதவிகளை பெற்றுக் கொள்ளலாம். இக் கூட்டம் ஒவ்வொரு திங்கட் கிழமையும் காலை பத்து மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## லொறி சேதம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பகுதியில் நேற்று ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் அச்சுவேலி வடக்கில் நிறுத்தப்பட்டிருந்த கிருஸ்ணபிள்ளை குமார் என்பவரின் லொறி சேதமடைந்தது. பொன்னர் கிருஸ்ணபிள்ளை படுகாயமடைந்தார். (மு)

### நிரந்தர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்ட ஊழியர்களில் எத்தனைபேர் இராணுவத்தினரால் கொல்லப்பட்...

### பாதுகாப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இராணுவத்தினர் பாலங்களை உடைத்துத் தொடர்புகளைத் துண்டித்துள்ளமையால் தமிழ் மக்கள் பட்டினி கிடந்து மடிவதாக தமக்கு கூறியதாகவும் ஆளுனர் பர்னாலா செய்தியாளர்கள் மத்தியில் கூறினார்.

முகாம்களை சுற்றி பார்வையிட்ட ஆளுநர் அங்கு நிலவிய குறைபாடுகளை கவனத்தில் கொண்டு தளபாட, மருத்துவ வசதிகளை மேற்கொள்ள உயரதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதுடன், கால்களை ...

### யாழ்நகர்

(1ஆம் பக்த் தொடர்ச்சி)

விமானங்கள் ஈடுபட்டன. அவற்றிற்கு துணையாக ஒரு குண்டுவீச்சு விமானம் தாக்குதலை நடத்தியது. அவ்ரோ விமானத்தில் இருந்தும் பீப்பாக் குண்டுகள் போடப்பட்டன. இதனால் கொட்டடிப் பகுதி, பண்ணை வீதிப்பகுதிகள் பாதிப்படைந்த கட்டடங்கள் மேலும்சேதமடைந்தன.

நேற்றுக்காலை நடந்த விமானத் தாக்குதலில் யாழ் சென்பற்றிக்ஸ் வீதியில் ஐந்திற்கும் மேற்பட்ட வீடுகள் கடும் சேதமடைந்தன. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் சிறுசேதத்திற்கு உள்ளாகின.

### எங்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

**அறிக்கை விளக்கம்**

மேலும் திரு. யோகி அவர்கள் தமது உரையில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கைஒன்றுக்கு விளக்கம் அளிக்கையில் நாம் ஜனநாயக நீரோட்டத்தில்சேர்வதானால் எமது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என கூறியிருந்தோம். இதனை வைத்துக்கொண்டு பலர் நாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கைவிடவும் தயாராக உள்ளோம் என எண்ணிக் கொண்டுள்ளனர். இந்த அறிக்கை சர்வதேச நாடுகளுக்காக விடப்பட்ட ஒருஅறிக்கை சர்வதேச நாடுகள் எம்மீது நல் நோக்கம் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக விடப்பட்ட அறிக்கை. இதில் நாம் கூறியிருந்த கோரிக்கைகளை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். தற்போதுள்ள ஒற்றையாட்சி முறை நீக்கப்பட வேண்டும் என அதில் கேட்டிருந்தோம். இவை இரண்டையும் சிங்கள அரசு தருமானால் நாம் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம் என்று கூறியுமிருந்தோம்.

ஒரு தேசிய இனம் சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருக்கிறது என்றால் அதற்கு ஒரு பாரம்பரிய பிரதேசம் இருக்க வேண்டும். அதற்கு ...

... மிடத்து அதனை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என நாம் கூறியிருந்தோம் என்றார்.

மேலும் அவர் அம்மான் ...

### வடபகுதிக்கான

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குவதற்கு எரிஎண்ணெய் கிடைப்பதில்லை, மீன்பிடிப் படகுகளுக்கு டீசல் இன்மையால் மீன்பிடி தடைப்பட்டுள்ளது. சொந்த நாட்டில் மக்கள் பிறந்துவளர்ந்த பூமியிலேயே வீடு வாசல்களை இழந்து அகதிகளாகி உள்ளார்கள்.

விவசாயப் பயிருக்கு தேவையான உர வகைகள், கிருமிநாசினிகள் இங்கு அனுப்பப்படுவதில்லை. கடந்த ஒரு வார காலமாக மின்சாரமும் தடைப்பட்டுள்ளது. இதனை திருத்துவதற்கு அனுமதிக்குமாறு இராணுவத்திடம் பணிக்க வேண்டும்.

கப்பலில் உணவுப்பொருள் அனுப்புவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் ஏற்கனவே வரண்டு போயுள்ள இப்பகுதிக்கு 500 தொன் உணவுப் பொருள் போதியதாக இல்லை. கூடுதலான தொகையை வாரத்தில் 3 நாட்களாயினும் அனுப்பினால்தான் ஓரளவு சமாளிக்க முடியும். சீனி, பால்மா இன்றி அப்பாவிக் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்கண்டவாறு தீர்மானத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த்து மாபெரும் ஊர்வலம் ஒன்றை நாளை புதன்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கும்.

இவ்வூர்வலம் சம்பந்தமான கலந்துரையாடல் சகல பாடசாலை மாணவ, மாணவிகள் மத்தியிலும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடத்தப்படும்.

குறிப்பிட்ட ஒரு சில பாடசாலை தவிர்ந்த ஏனைய இடங்களில் அந்தப் பாடசாலைகளிலேயே இக் கருத்தரங்கு ... மங்கையற்கரசி மகாவித்தியாலயத்திலும்,

வடமராட்சி மாணவர்களுக்கான கருத்தரங்கு வடஇந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளிலும் நடைபெறும்.

மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

---

**வவுனியா**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாகத் தெரியவருகிறது.

வடமாகாணத்தில் இடம்பெறும் மோதலில் காயமடையும் படையினருக்குச் சிகிச்சை செய்யப்படும் பிரதான நிலையமாக இந்த வைத்தியசாலை செயல்படவுள்ளதாம்.

வவுனியாவில் இந்த வைத்தியசாலை அமைந்திருக்கும் இடம், இராணுவத்தினரால் யுத்தப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதும், பொதுமக்கள் எவரும் இப்பகுதிக்குச்செல்ல அனுமதிக்கப் படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது வடக்கில் இடம்பெற்றுவரும்யுத்தத்தில்காயங்களுக்குள்ளாகும் இராணுவத்தினர் அனைவருக்கும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டுவருகிறது.

சிங்கள மக்கள் காயங்களுக்குள்ளாகும் இராணுவத்தினரின் தொகையையும், இறந்து போகும் இராணுவத்தினரின் தொகையையும் அறியாமல் இருப்பதற்கு வவுனியாவில் புதிதாக அமைய உள்ள இராணுவவைத்தியசாலைஅரசுக்கு வாய்ப்பாக இருக்குமென்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. (தி)

## திருட்டு அதிகரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் அதிகரித்து வரும் திருட்டுகள்பற்றி இப்பகுதி மக்கள் பலத்த பீதியடைந்துள்ளனர். பட்டப்பகலிலும் இப்பகுதிகளில் திருட்டுகள் இடம்பெற்றுவருகின்றன. இத் திருட்டு முயற்சிகளில் ஈடுபடும் திருடர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

...ள்ளனர் என்ற விபரத்தை இராணுவ இணைப்பதிகாரி முதலில் வெளியிடட்டும்.

இந்த இணைப்பதிகாரியின் அனுமதிச்சீட்டுப் பெற்று நகரத்திற்குச் சென்ற செட்டிக்குளம்குடியேற்றத்திட்ட உத்தியோகத்தரும் அகதிகள் நிவாரணப் பொறுப்பாளருமாகிய எஸ். நாகராசாவிற்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

இந்தநிலையில் இணைப்பதிகாரியின் அழைப்பை ஏற்று யார்தான் நகரப்பகுதிக்குச் செல்ல முடியும்?

வவுனியா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. தமது மகன்மாரைக்காண இராணுவ முகாம்களுக்குச் செல்லும் பெற்றோர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

இராணுவத்தினரின் இத்தனை அட்டூழியங்களுக்குப் பின்பும் பொதுமக்கள் உறுதியாகவே உள்ளனர். மக்களின் இந்த உறுதியான போக்குத்தான், விடுதலைப் புலிகள் களத்தில் நின்று போராடவலுக்கொடுக்கின்றது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## 'கசிப்பு' விற்பனையில் இன ஒற்றுமை!

வவுனியா எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களில், கசிப்பு உற்பத்தி பெருகியுள்ளது.

இராணுவத்தினரின் ஊக்[...] விப்பில் சிங்கள மக்[...] கசிப்பு உற்பத்தியை [...] தொழிலாக கையாண்டு[...] கின்றனர்.

சிங்கள மக்களுடன் வாணிபத்தில் ஈடுபடும் சில தமிழ் மக்கள், கசிப்பு உற்பத்தியை தமிழ்[...]க்குள்ளும்கொண்டு வர [...]ற்சி எடுத்துள்ளனர். சிலர் [...]வரிடமிருந்து [...]பற்று, வவுனியா [...]ம் மதுபானம் பற்[...]யை நிவர்த்தி [...] வருகின்றனர்.

[...] மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளினால், வவுனியா பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அறவே ஒழிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று இராணுவத்தினர் பகிரங்கமாக கசிப்பு உற்பத்திக்கு ஊக்குவிப்பு வழங்கி வருகின்றனர். (தி)

... இழந்த ஒரு பெண்மணிக்கு முச்சக்கரவண்டி ஒன்றையும் வழங்கினார்.

---

**பரந்தனில்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளின் தாக்குதலால் இராணுவம் மேலும் முன்னேறாது பரந்தன் சந்தி, பூங்காவனம்சந்தி ஆகியஇடங்களில் நிற்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. பரந்தன் சந்தியில் தொடர்ந்து சண்டை நடைபெறுகின்றது.

**வீரமரணம்**

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் கப்டன் பிரபா, டெனா, சிட்டன், முத்து, நங்கப்பன் ஆகியோர் மரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

இச்சண்டையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஒன்பதுபேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் முப்பத்தைந்து பேர் காயம் அடைந்ததாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (மு)

---

**இருவர்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன் காயமுற்று இருந்த அமுது (ஐயாசாமி இராசா பருத்தித்துறை) என்ற போராளி நேற்று மரணமடைந்தார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மு)

---

**காயமுற்ற**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ததாகவும் ஆனால் இது பற்றி தீர்க்கமானமுடிவுஎதுவும் இன்னும் தெரிவிக்கப்படவில்லை எனவும் யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

... ளாகின.

மீண்டும் நண்பகல் 1.30 மணியளவில் 4 அவ்றோ விமானங்களும், ஒரு ஹெலிக்கப்டரும் கோட்டைப்பகுதியில் தாக்குதலை மேற்கொண்டன. பிற்பகல் 3. 40 மணியளவில் இரண்டு அவ்றோ விமானங்கள் கோட்டைக்கு அருகில்சிலகுண்டுகளைவீசின.

---

**ஸ்ரீலங்கா**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டமிட்டுச் சென்றது. புலோலி, துன்னாலைப் பகுதியையும் வட்டமிட்ட இந்த ஹெலிக்கப்டர் துன்னாலைப் பகுதியில் தாக்குதல்களையும் நடாத்தியது. இத்தாக்குதல்களின் போது சில வீடுகள் சேதமுற்றன. எவரும் காயமுற்றதாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

வடமராட்சிப் பகுதிக் கடலில் மேற்கொள்ளப்படும் கடற் பீரங்கித் தாக்குதல்களாலும், ஹெலிக்கப்டர் தாக்குதல்களாலும் இப்பகுதி மக்கள் பலத்த பீதி அடைந்துள்ளனர்.

இத்தாக்குதல்களையடுத்து பொது இடங்களிலும் வீடுகளிலும் பதுங்கு குழிகள் அமைக்கும் நடவடிக்கைகள் மிகத்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் உணவுப்பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடுகள் நிலவிவருகின்றன. இப்பகுதி வர்த்தகர்கள் உணவுப் பொருட்களை மிகக்கூடிய விலைகளிலேயே விற்பனை செய்வதாகப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

---

**இந்தியா**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் இந்தியா தனது முழுமையானசெல்வாக்கினையும்பயன்படுத்த வேண்டும் என்றும்; விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பரந்த செல்வாக்கினை பெற்றுள்ளதால் இராணுவத்தீர்வு நடைமுறைச் சாத்தியமற்றதென்றும் தெரிவித்துள்ளார்.

... இருக்க வேண்டும். அதற்கு எனறோர் தனித்துவ மொழி இருக்க வேண்டும். ஒரு தனிக் கலாசார பாரம்பரியம் இருக்க வேண்டும். அதற்கென்று ஒரு வரலாறு இருக்க வேண்டும். இவை அனைத்தையும் கொண்ட, ஒரு சுயநிர்ணய உரிமையையுடைய ஒரு தேசிய இனத்திற்குத் தான் விரும்பினால் தான் சேர்ந்திருக்கவும் பிரிந்திருக்கவும் அந்த இனத்திற்கு உரிமை உண்டு. ஆகவே தான் எமது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படு...

மேலும் அவர் அம்மான் செல்லக்கிளி பற்றிக் கூறும்பொழுது எமது இயக்கத்தின் அதி மூத்த உறுப்பினர்களில் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த உறுப்பினர் அம்மான் செல்லக்கிளிதான் என்றார். மேலும் அவர் செல்லக்கிளி போராட்டத்தில் பங்கேற்ற நிகழ்ச்சிகளையும் நினைவுகூர்ந்தார்.

இக் கூட்டத்தில் மேலும் பல விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள் (லோ)

## வீர அஞ்சலி



### பிரசன்னா

(புதியான் தயாகரன். புத்தூர்)

| வீர ஜனனம் | வீர மரணம் |
| --- | --- |
| 14 - 05 - 1971 | 23 - 07 - 1990 |

தமிழின விடிவிற்காய்
தரணியிலே உதித்த தனயனே!
மக்களின் விடிவிற்காய் — தமிழ்
மண்ணில் மலர்ந்த மறவனே!
அந்நியர் உன்னுயிரை அழித்தனர்
ஆனால் உன் இலட்சியத்தை
அழிக்கவே முடியாது.

B/1280 பெற்றோர், நண்பர்கள்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.